1975 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ), (இ) & (உ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜா வட்டத்தைச் சேர்ந்த காரை கிராமத்தில் கக்கன் காலனி என்று சொல்லப்படும் இடத்தில் நில அளவை எண்கள் 639/2 மற்றும் 596 ஆகியவற்றில் உள்ள நிலங்களை சுமார் 19 பேர்கள் ஆக்கிரமித்துக் குடிசைகள் அமைத்துள்ளார்கள். அதில் நில அளவை எண் 639/2-ல் உள்ளவர்களைத் தற்சமயம் காலி செய்யும்படி கேட்கப்படவில்லை. நில அளவை எண் 596 என்பது ஏரிப் புறம்போக்கு ஏரி நிலங்களின்மீதான ஆக்கிரமிப்பினை எதிர்த்து பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் முறையிடுவதாலும், ஆயக்கட்டுதாரர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதாலும், நில அளவை எண் 596 ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களைக் காலி செய்வதற்காக அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அருகாமையில் உள்ள நில அளவை எண் 641 இராணுவ முகாம் நிலத்தைத் தருவதாக இராணுவ அதிகாரி, சம்மதம் தெரிவித்துள்ளார். ஆகையால் நில அளவை எண் 596-ல் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு நில அளவை எண் 641-ல் மாற்று இடவசதிகள் அளிக்கப்படும் என்று மாவட்ட வருவாய் அதிகாரி தெரிவித்துள்ளார்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, ராணிப்பேட்டையில் உள்ள இந்தக் காரை கிராமத்தில் உள்ள ஏழை மக்கள் குடிசை போட்டுக் கொண்டு வாழ்கிறார்கள். அதற்கு சட்ட மன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று பதில் சொல்லப்பட்டது. சட்ட மன்ற உறுப்பினராகிய நான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. வேறு சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கலாம். அது என்னுடைய தொகுதி. எனக்குத் தெரியும். இந்த ஏழை மக்களுக்கு அந்த இடங்களிலிருந்து அவர்களை வெளியே போகச் சொல்வதற்கு முன் மாற்று இடங்களை உடனடியாக அவர்களுக்குத் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள்தான் தன் பதிலில் ஏற்பாடு செய்து தரப்படும் என்று சொல்லிவிட்டாரே.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட எந்தவிதமான தகவலும் அங்கேயிருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு அனுப்பப்படவில்லை. இதை உடனடியாக அமுல்

செய்ய வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் யாரையும் காலி செய்ய வேண்டாமென்று உத்திரவு இட்டது மாத்திரமல்ல, உடனடியாக அவர்களுக்கு மாற்று இடங்களைத் தரவேண்டுமென்று ராணிப்பேட்டை கோட்டாட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப் பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, திரு. வகாப் அவர்கள் சுட்டிக்காட்டியது போல என்னிடத்திலும் முறையிட்டார்கள். நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை அவர்களுக்குப் பட்டா வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் மாற்று இடம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அதற்குள்ளாக அவர்களை உடனடியாகக் காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்களை காலி செய்யுங்கள் என்று வற்புறுத்துகிறார்கள். ஆகவே, அவர்களை வற்புறுத்தாமல், அவர்களுக்கு மாற்று இடங்களைக் கொடுத்ததற்குப் பின்னால் அவர்களைக் காலி செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு உத்திரவு வழங்கப்படுகிற வரையில் அவர்களைக் காலி செய்ய வேண்டாமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

Lands in Ekambarapuram village.

* 551 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether a large number of Kisans have applied for patta for the lands at Ekambarapuram in Ambasamudram area in Tirunelveli district in recent times; and

(*b*) if so, the action taken by the Government in this respect?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பட்டா வேண்டி 15 உழவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.